சுமார் ரூ. 150 கோடியாகும். இந்த அடிப்படையில் ஒப்பு நோக்குமிடத்து, நடப்பு ஆண்டின் திட்டத் தொடர்பான பணிகளுக்கு ரூ. 1377 கோடி என இருக்க, வரும் ஆண்டின் திட்ட ஒதுக்கீடு ரூ. 1450 கோடியும், ரூ. 150 கோடியுமாகச் சேர்ந்து ரூ. 1600 கோடியுமாகத் திகழ்கிறது.

15. வல்லுநர்கள் கொண்ட நமது மாநிலத் திட்டக் குழு தமிழகத்தின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வரையறுத்து வடிவமைக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. இன்றைய நிலையில் எதிர் நோக்கக் கூடிய நிதி ஆதாரங்களை அடித்தளமாகக் கொண்டு, 1990-95 கால கட்டத்தில் எட்டாவது திட்டச் செலவாக, மொத்தம் ரூ. 8500 கோடியிலிருந்து சுமார் ரூ. 9000 கோடி அளவுக்கு வகை காண எண்ணியுள்ளோம். இந்தக் குறிக்கோளை எய்திட, வரத்து வாயில்களை வலிமைப் படுத்தி முன்னுரிமைப் பட்டியலுக்கு இணங்கச் செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியமாகும்.

புதிய—மக்கள் நலத் திட்டங்கள்.

16. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் நடப்பு ஆண்டில் பல புதிய மக்கள் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியதின் காரணமாகப் பெரும்பாலான மக்கள் பயனடைந்துள்ளனர்.

17. இந்த நிதி நிலை ஆண்டின் 11 மாதங்களில், அதாவது பிப்ரவரித் திங்கள் முடிய—

* 83 லட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு ஐந்து கிலோ அரிசி வீதம் ஐந்து முறை வழங்கியதில் ரூ. 38.12 கோடி செலவு.

* இலவசமாக வேட்டி, சேலைகள் 83 லட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு ரூ. 42.25 கோடி செலவில் வழங்கப் பட்டுள்ளது........

2. தகவல் கோரல்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் ஒரு கட்சித் தொண்டர் சிறையிலிருப்பதாகக் கூறப்படுவது குறித்து.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, சிறையில் எங்கள் தோழர் ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கிறார் என்று தகவல் வந்திருக்கிறது. உடனடியாக அவரை விடுதலை செய்ய உத்தரவிட வேண்டுகிறேன். (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்கள் கவனிக்க வேண்டும். இதுபோல இடையிலே குறுக்கீடு செய்தால் நான் வெளியேற்ற வேண்டியிருக்கும். (கூச்சல்—குழப்பம்)

TRUTH ALONE TRIUMPHS

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : தலைவர் அவர்களே, உயிருக்கு ஆபத்தான நிலையில் ஒரு தொண்டர் சிறையில் இருக்கிறார். அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். திரு. இளையபெருமாள் அவர்களும்..... (கூச்சல்—குழப்பம்)

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே,...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்கள் கவனிக்க வேண்டும். ஒரு முறைதான் (குறுக்கீடுகள்) அமர்ந்துவிடுவீர்கள் என்று நம்புகிறேன். (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, யாருக்கு ஆபத்து என்றாலும் உடனடியாக விடுதலை செய்யப் படுவார்கள். நேற்று வழக்கு முடிவுக்காகத்தான் இந்த அரசு காத்துக்கொண்டிருந்தது. வழக்கு முடிந்துவிட்டது. எனவே அனைவருமே விடுதலை செய்யப்பட இருக்கிறார்கள். (கூச்சல்—குழப்பம்) தமிழ் தெரியவில்லை என்றால் நான் என்ன செய்வது? (கூச்சல்—குழப்பம்) எல்லோரையும் விடுதலை செய்யுமாறு நேற்றைய, கோர்ட்டு தீர்ப்புக்குப் பிறகு.... (கூச்சல்—குழப்பம்).

(காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் முன்னால் வரத் தொடங்கினர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரும் தங்களுடைய இடத்திலிருந்து வரக்கூடாது. அவரவர்களுடைய இடங்களுக்குப் போய் உட்காருங்கள்.

1. வரவு—செலவுத் திட்டம், 1990—91, அளித்தல்—தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

*முதியோர் உதவித் தொகையும், உடல் ஊனமுற்றோர், விதவைகள், ஆதரவற்ற மகளிர் ஆகியோருக்கு வழங்கும் உதவித் தொகைகளும் மாதம் ஒன்றுக்கு ரூ. 35 என்பதிலிருந்து ரூ. 50 ஆக உயர்த்தப்பட்டு, எண்ணிக்கை வரம்பும் நீக்கப்பட்டதால், கூடுதலாக ஆகும் செலவு ரூ. 9.14 கோடியாகும். இதனால் 4.64 லட்சம் பேர் பயனடைகின்றனர்.

*ஏழைப் பெண்கள் திருமண உதவி ஐயாயிரம் ரூபாய் வழங்கும் ஏற்றமிகு திட்டத்தின்கீழ் 11,338 பெண்கள் பயன் பெற்றுள்ளனர். இதற்கெனச் செலவிடப்பட்ட தொகை ரூ. 5.59 கோடியாகும்.

*கருவுற்ற ஏழைப் பெண்களுக்கு ரூ. 200 வீதம் மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் 97,472 மகளிர் பயனடைந்துள்ளனர். இதற்கு ஆகியுள்ள செலவு ரூ. 1.95 கோடி.

*குடும்பத் தலைவர்களை இழந்துவாடும் வறிய குடும்பங் களுக்கு ரூ. 2,000 நிதி வழங்கும் திட்டத்தின் பயனை 10,517 குடும்பங்கள் பெற்றுள்ளன. இதற்கு செலவு ரூ. 2.10 கோடி;